## தலைவர் கலைஞர் ஆட்சியில் அரசாணை வெளியிடப்பட்ட திட்டம்! அத்திப்பட்டில்

# ரூ.10,158 கோடியில் வடசென்னை மிக உய்ய அனல் மின் நிலையம்-III

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து மின் உற்பத்தியை தொடங்கி வைத்தார்!

**சென்னை, மார்ச் 9 –**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.3.2024) திருவள்ளூர் மாவட்டம், அத்திப்பட்டு கிராமத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் 10,158 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக நிறுவப்பட்டுள்ள 800 மெகாவாட் வட சென்னை மிக உய்ய அனல் மின் நிலையம்–III திறந்து வைத்து, மின்சார உற்பத்தியினை தொடங்கி வைத்தார்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.3.2024) திருவள்ளூர் மாவட்டம், அத்திப்பட்டு கிராமத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் 10,158 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 800 மெகாவாட் வட சென்னை மிக உய்ய அனல் மின் நிலையம்–III–யும், அந்நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையையும் திறந்து வைத்து, செயல்பாட்டினை பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஜெ. கோவிந்தராஜன், துரை சந்திரசேகர், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் தலைவர்/ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தலைவர் கலைஞர் ஆட்சியில் அரசாணை வெளியிடப்பட்டது!**

26.10.2010 அன்று அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மின்சார வாரியம் மூலமாக திருவள்ளுவர் மாவட்டம், அத்திப்பட்டு பகுதியில் சுமார் 190 ஏக்கர் நிலப்பரப்பில் 800 மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் திட்டம்-III நிறுவுவதற்கான அரசாணை வெளியிடப்பட்டது.

கடந்த பத்து ஆண்டுகளாக மந்தமாக நடைபெற்று வந்த மின் திட்டப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பின்னர், மின் திட்டங்கள் அனைத்தும் முடிக்கி விடப்பட்டு உடனடியாக இயக்கத்திற்கு கொண்டு வர தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பயனாக, திருவள்ளூர் மாவட்டம், அத்திப்பட்டு பகுதியில், சுமார் 190 ஏக்கர் நிலப்பரளவில், 10,158 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள 800 மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் திட்டம்-III பணிகள் முடிக்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் மின் உற்பத்தி தொடங்கி வைக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**வட சென்னை மிக உய்ய அனல் மின் நிலையம்-III சிறப்பு அம்சங்கள்**

அதி உய்ய நிலை வெப்ப தொழில்நுட்பம் பயன்படுத்தி நிறுவப்படும் தமிழ்நாட்டின் முதல் அனல் மின் திட்டமாகும். பிற அனல் மின் திட்டங்களை ஒப்பிடும் போது, இது 5 முதல் 6 சதவீதம் வரை அதிக திறன்மிக்கது. எனவே, இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு எரிபொருள் செலவு குறைவதுடன், மின் உற்பத்தியினை தொடங்குவதற்கு குறைவான நேரமே தேவைப்படும்.

இத்திட்டத்தின் மூலம் ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய நிலக்கரி நுகர்வு 0.45 கிலோ கிராம் அளவு மட்டுமே தேவைப்படுவதால், கார்பன் டை ஆக்சைடு உமிழ்வு 25 முதல் 30 சதவீதம் வரை குறைகிறது. எனவே, இத்திட்டமானது, சுற்றுச்சூழல் நட்புணர்வுத்தன்மை கொண்டுள்ளது.

இந்த நிலையத்தில் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை 765 கி.வோ.மின் தொடரமைப்பு மூலமாக மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு பகிர்மானம் செய்யப்படும்.

இத்திட்டத்தின் மூலம், மாநிலத்தின் மின் உற்பத்தித் திறன் மேலும் அதிகரித்து, மாநிலத்தின் மின்சாரத் தேவையினை பூர்த்தி செய்ய உறுதுணை புரிவதுடன், வெளிசந்தையில் மின் கொள்முதல் செய்வது குறைக்கப்படும். இதனால், மின்சார வாரியத்தின் நிதி நிலை மேம்படுவதுடன் நம் மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் இத்திட்டம் முக்கிய பங்களிக்கும்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன், துரை சந்திரசேகர், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் தலைவர்/ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் இணை மேலாண்மை இயக்குநர் நிதி விஷு மஹாஜன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபுசங்கர், மின் தொடரமைப்புக் கழக மேலாண்மை இயக்குநர் மா.இராமச்சந்திரன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இயக்குநர் (திட்டம்) திருமதி நா.உமாதேவி, இயக்குநர் (பகிர்மானம்) இரா.மணிவண்ணன், இயக்குநர் (உற்பத்தி) த.ராஜேந்திரன், இயக்குநர் (இயக்கம்) செல்வசேகர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


